# ஆர்வ வெளிப்பாடு (EOI)

## வரையறுக்கப்பட்ட இலங்கை உயிரியல் தொழில்நுட்பவியல் நிறுவனம் (தனியார்) நிறுவனம்

## ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னோலஜி (பிரைவட்) லிமிடெட்

## SLIBTEC இன் உள்ளகக் கணக்காய்விற்கான ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்

ஒப்பந்த இலக்கம்: **SLIBTEC/PROC/307/Consultancy/ Procurement of Consultation Service for Internal Auditor to SLIBTEC**

1. ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹேனவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னோலஜி (பிரைவட்) லிமிடெட் (SLIBTEC), இலங்கையை ஒரு பிராந்திய உயிரியல் தொழில்நுட்ப மையமாக மாற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டு, நாட்டின் முதலாவது உயிரியல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புப் பூங்காவை (Biotechnology Innovation Park) உருவாக்கி வருகிறது. SLIBTEC 2020 ஒக்டோபர் மாதத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டதுடன், திறைசேரியின் செயலாளர் இதன் தனிப் பங்குதாரராக உள்ளார்.

2. உயிரியல் தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் வர்த்தக மயமாக்கலில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னோலஜி (பிரைவட்) லிமிடெட் (SLIBTEC), உள்ளக கணக்காய்வு ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காகத் தகுதியும் அனுபவமும் கொண்ட தனி நபர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகளைக் (EOI) கோருகின்றது.

3. SLIBTEC இன் நிதிச் செயற்பாடுகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல், இலங்கையில் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை மற்றும் சட்டத் தேவைகள் மற்றும் அரசாங்க வழிகாட்டுதல்களுக்கு அமைவாகச் செயற்படுவதை மதிப்பிடுதல், மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகளைக் கண்டறிதல், மற்றும் நிறுவன ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளைப் பலப்படுத்துதல் ஆகியன இந்த ஈடுபாட்டின் நோக்கமாகும்.

4. தனிப்பட்ட ஆலோசகரின் பணியின் எல்லை பின்வரும் பணிகளைச் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் (அனைத்து நடைமுறைகளும் பொருந்தக்கூடிய அரசாங்க / உள்நாட்டு அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க வேண்டும்):
   - SLIBTEC இற்கான ஆண்டு இடர்-அடிப்படையிலான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.
   - காலாண்டு கணக்காய்வு குழுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் கண்டறிதல்கள், பரிந்துரைகள் மற்றும் நிர்வாகப் பதில்களுடன் கூடிய அறிக்கைகளைக் காலாண்டு மற்றும் ஆண்டிற்கு ஒருமுறை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்தல்.
   - ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு தரநிலைகளுக்கு இணங்க உள்ளகக் கணக்காய்வுகளை நடத்துதல்.
   - உள்ளகக் கட்டுப்பாடுகள், நிதி முகாமைத்துவம், கொள்வனவு: சரக்கு இருப்பு, மனித வளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செயல்முறைகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறனை மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் மதிப்பாய்வு செய்தல்.
   - பொருந்தக்கூடிய சட்டங்கள், அரசாங்கக் பெறுகை வழிகாட்டுதல்கள், நிதி ஒழுங்கு முறைகள் மற்றும் உள்ளக் கொள்கைகளுக்கு இணங்குவதைச் சரிபார்த்தல்.
   - அபாயங்கள், கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் திறமையின்மைகளைக் கண்டறிந்து நடைமுறைச் சாத்தியமான மேம்பாடுகளைப் பரிந்துரைத்தல்.
   - ஒப்புக்கொள்ளப்பட்ட வெளிவாரி கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதைப் பின்தொடர்ந்து கண்காணித்தல் (Follow up).
   - சுதந்திரத்தைப் பாதிக்காத வகையில், கோரப்படும் போது நிர்வாகத்திற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

5. பணிக் காலம்

   இந்தப் பணி இரண்டு (02) வருடக் காலத்திற்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், SLIBTEC பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் திருப்திகரமான செயல்திறன் மற்றும் நிறுவனத் தேவைகளின் அடிப்படையில் இந்தக் காலத்தை நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகளுடன், நிறுவனப் பிரதிநிதிகள் (கீழே 7(e)-இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியான பிரதிநிதிகள்) வாரத்திற்கு ஒரு முறையாவது நிறுவனத்திற்கு செல்ல வேண்டும்.

6. ஆர்வமுள்ள தனிநபர் ஆலோசகர்கள் பின்வரும் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளைப்' பூர்த்தி செய்ய வேண்டும்:
   - சான்றுபடுத்திய உள்ளகக் கணக்காய்வாளர் (CIA) அல்லது பட்டயக் கணக்காளர் (ICASL வழியான CA), ACCA, CIMA அல்லது அதற்கு இணையான தொழில்முறைச் சான்றிதழ்.
   - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல், நிதி, கணக்காய்வு அல்லது அது தொடர்பான துறையில் ஒரு பட்டம்.
   - இலங்கையில் குறைந்தபட்சம் 3+ ஆண்டுகள் கணக்காய்வு அனுபவம் (உள்ளக கணக்காய்வு அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது)
   - இலங்கை கணக்கியல் தரநிலைகள் (SLAS), வரிச் சட்டங்கள், 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டம், கடைகள் மற்றும் அலுவலகங்கள் சட்டம், பொது நிறுவனம் பற்றிய வழிகாட்டுதல்கள் மற்றும் இலங்கையின் நிதி அமைச்சின் சுற்றறிக்கைகள் பற்றிய வலுவான புரிதல்.
   - கணக்காய்வு முகாமைத்துவ மென்பொருள், தரவு பகுப்பாய்வுக் கருவிகள் மற்றும் MS Office (Excel, Word, Outlook) ஆகியவற்றில் தேர்ச்சி.
   - கணக்காய்வுத் திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பீடு செய்வதில் அனுபவம்.
   - நிதி ஆவணங்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் மறுபரிசீலனை செய்வதில் தேர்ச்சி.
   - பணிப்பாளர் சபையுடன் திறம்பட ஒத்துழைப்பதற்கான வலுவான தகவல் தொடர்பு மற்றும் நபர்களுக்கிடையேயான உறவுத் திறன்கள்.
   - சிறந்த பகுப்பாய்வு, பிரச்சினை தீர்க்கும் திறன் மற்றும் விமர்சன ரீதியாகச் சிந்திக்கும் திறன்கள்.
   - சுயாதீனமாகவோ அல்லது ஒரு குழுவாகவோ இணைந்து பணியாற்றும் திறன்.
   - பேச்சு மற்றும் எழுத்துபூர்வ தகவல் தொடர்பில் சிறந்த திறன்கள்.
   - வலுவான நெறிமுறைத் தரநிலைகள் மற்றும் இரகசியத்தன்மையைப் பேணுவதற்கான அர்ப்பணிப்பு.
   - மாறிவரும் ஒழுங்குமுறைச் சூழல்கள் மற்றும் தொழில்துறை நடைமுறைகளுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொள்ளும் திறன்.
   - இலங்கை அரசாங்கத்தின் நிதி விதிமுறைகள், அரசாங்க பெறுகை வழிகாட்டுதல்கள் இலங்கை கணக்கியல் தரநிலைகள், தொழிலாளர் சட்டங்கள் மற்றும் ஏனைய பொருந்தக்கூடிய சட்டங்கள் பற்றிய நல்ல அறிவு.

7. ஆலோசகர்கள் பின்வரும் தகவல்களைச் சான்றளிக்கப்பட்ட ஆவணங்களுடன் வழங்க வேண்டும். வழங்கப்பட்ட www.slibtec.gov.lk/procurement/. என்ற இணையதள வடிவத்தின் பிரகாரம் ஆலோசகர் ஆலோசனைச் சேவையைச் செய்வதற்குத் தகுதியானவர் என்பதைச் சுட்டிக்காட்டும் சான்றளிக்கப்பட்ட ஆவணங்களுடன் தகவல்களை வழங்க வேண்டும். இந்த ஆலோசனையின் குறிப்பு விதிமுறைகள் (TOR) மற்றும் பிற தகவல்கள் குறிப்புக்காக இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.
   a) கையொப்பமிடப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டுக் கடிதம்
   b) கல்வி மற்றும் தொழிற்துறைத் தகுதிகள், முந்தைய பணிகள் மற்றும் வாடிக்கையாளர் பட்டியல் ஆகியவற்றுடன் கூடிய விரிவான சுயவிபரப் படிவம் (CV) (இணைப்பு 01 மற்றும் 02 ஆர்வ வெளிப்பாட்டுத் தகவல் படிவத்தின் பிரகாரம்)
   c) தொடர்புகொள்ளக்கூடிய தகவல்களுடன் நிறைவு செய்யப்பட்ட ஒத்த பணிகள் உட்பட, பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான சான்றுகள்
   d) தேசிய அடையாள அட்டையின் பிரதி
   e) குழு உறுப்பினர்களின் விரிவான சுயவிபரப் படிவம் (CV)
   f) ஏதேனும் பிற பொருத்தமான தகவல்கள்

8. தேசிய பெறுகை முகவரகத்தால் வெளியிடப்பட்ட ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதல்களின் பிரகாரம் ஆலோசகர் தகுதி முறைமை (CQS) ஆகஸ்ட் 2007-ஐப் பின்பற்றி ஆலோசகர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். தேர்வுப் பட்டியலில் உள்ள ஆலோசகர்கள் இன்னொரு கட்டத்தில் விரிவான முன்மொழிவைச் சமர்ப்பிக்க அழைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படலாம்.

9. ஆர்வமுள்ள நபர்கள் மேலதிக தகவல்களை ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னோலஜி (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். முகவரி: கட்டடம் I, மாஹேனவத்தை, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம. கவனத்திற்கு: திரு. தரிந்து மதுஷங்க (பெறுகை முகாமையாளர்) தொலைபேசி: +94 11 3431844, திங்கள் முதல் வெள்ளி வரை, மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை. மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து www. slibtec.gov.lk என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

10. கோரப்பட்ட அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய ஆர்வ வெளிப்பாடுகளை அதன் ஒரு நகல் பிரதியுடன் 2026 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும். ஆர்வ வெளிப்பாடுகளைத் தாங்கி வரும் கடித உறையின் மீது ''ஆர்வ வெளிப்பாடு – உள்ளகக் கணக்காய்வு ஆலோசனைச் சேவை (தனிப்பட்ட ஆலோசகர்)'' என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

**பிரதான செயற்பாட்டு அதிகாரி,**
**ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னோலஜி (பிரைவட்) லிமிடெட்**
**SLIBTEC கட்டம் 1 கட்டிடம்,**
**மாஹேனவத்தை, தலகல வீதி,**
**பிட்டிபன, ஹோமாகம.**
**தொலைபேசி: +94 113431844**
**மின்னஞ்சல்: slibtec@gmail.com**
**இணையதளம்: www.slibtec.gov.lk**
**27 ஜூலை 2026**